**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUPATHUR.**

**CC. No. 331/2026.**

**Alangayam Police Station**

**Cr.No.2/2017**

| | | |
|---|---|---|
| 1. Deposition of Witness for | : | PW6 |
| 2.Name | : | திரு.மணிகண்டன் |
| 3. Age | : | 31 |
| 4.Father's Name | : | சங்கர் |
| 5.Village | : | தீர்த்தமலை |
| 6.Taluk | : | அரூர் |
| 7.Calling | : | காவல் உதவி ஆய்வாளர் |
| 8.List witness | : | Additional Witness |

Solemnly affirmed by **Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur** in accordance with the provision of Act X of 1873 of the day of **30.07.2026.**

A1 to A5 present.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம்– 12.42 P.M

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்– 12.57 P.M

<u>முதல் விசாரணை</u>:–

நான் தற்போது ஆலங்காயம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். (இவ்வழக்கில் காவல் உதவி ஆய்வாளர் திரு.ஜெகநாதன், அவர்களை எனக்கு நன்கு தெரியும். அவரின் கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சயம். மருத்துவர் சத்தியராஜநேசன் ஆகியோருக்காகவும் சாட்சியம் அளிக்கவும் அவர் தயாரித்த ஆவணங்கள் மற்றும் வல்லுநர்களின் கருத்துரைகளை இந்த சாட்சியம் மூலம் குறியீடு செய்ய எதிரி தரப்பில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை என தெரிவிக்கப்பட்டது.) கடந்த 02.01.2017–ம் தேதி மாலை 17.00 மணிக்கு ஆலங்காயம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.ஜெகநாதன் என்பவர் காவல் நிலைய பொறுப்பில் இருந்த போது வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்குச் சென்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டிருந்த அருள்ஜோதி என்பவரிடம் இருந்து பதிவு செய்த புகார் வாக்குமூலத்தின் பேரில் கடந்த 02.01.2017–ம் தேதி மாலை 17.00 மணிக்கு ஆலங்காயம் காவல் நிலைய குற்ற எண்.2/2017, U/s. 341, 294(b), 323, 324, 506(i) IPCன் படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். புகார் மனு ஏற்கனவே அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை **<u>அ.த.சா.ஆ.4.</u>** கடந்த 02.01.2017 அன்று மாலை 18.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் குமரேசன் மற்றும் தனஞ்செயன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை

பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்துள்ளார். பார்வை மகசர் **<u>அ.த.சா.ஆ.5.</u>** மாதிரி வரைப்படம் **<u>அ.த.சா.ஆ.6</u>**. வழக்கின் சாட்சிகளான அருள்ஜோதி, வரதராஜி, விஜயலட்சுமி, சௌந்தரராஜன், குமரேசன் மற்றும் தனஞ்செயன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார். பின்னர் காயம்பட்ட அருள்ஜோதி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சத்தியராஜநேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றுள்ளார். அருள்ஜோதி என்பவரின் காயச்சான்று **<u>அ.த.சா.ஆ.7.</u>** மேலும் இவ்வழக்கு சம்மந்தமாக அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் விசாரணை செய்ய வினோத், செந்தில், குமார், ரவி மற்றும் செங்கண்ணன் ஆகியோர் கும்பலாக வந்து அ.சா.1ஐ தாக்கியதாகவும், வாணியம்பாடி மருத்துவமனையில் இருந்த அ.சா.1 அருள்ஜோதி என்பவரை விசாரித்த போது அவருக்கு சரியாக யார் யார் அடித்தார்கள் என்று சொல்லமுடியவில்லை என்றும் அதனால் செங்கண்ணன் பெயரை அவரால் கூற முடியவில்லை என்றும் கூறியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவு 341, 294(b), 323, 324, 506(i) IPC யிலிருந்து 147, 148, 341, 294(b), 323, 324, 506(ii) IPC யாக மாற்றம் செய்துள்ளார். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **<u>அ.த.சா.ஆ.8.</u>** இத்துடன் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவு 147, 148, 341, 294(b), 323, 324, 506(ii) படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

நீங்கள் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கானது 20.12.2016 அன்று 13.00 மணிக்கு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக புகாரில் சான்றொப்பம் உள்ளது என்றால் சரிதான். வாக்குமூலத்தின் அடிப்படையில் 02.01.2017-ல் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சம்பவமானது 18.12.2016 அன்று சோமசுந்தரம் வீட்டருகே நடந்ததாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி சோமசுந்தரம் என்பவர் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். விபத்து பதிவேட்டில் சிகிச்சை பெற்ற நபர் தன்னை பதினைந்து நபர்கள் தாக்கியதாக குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். அரசு மருத்துவமனையில் 18.12.2016 மாலை 03.45 மணிக்கு தான் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் ராமன் என்பவருக்கும் தனக்கும் தான் பிரச்சனை என்று தான் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் ஐந்தாம் எதிரி செங்கண்ணன் பெயர் குறித்து எங்கும் குறிப்படப்படவில்லை என்று சொன்னால் சரிதான். புகார்தாரர் தன்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் சம்பவ இடத்தில் இரவு 09.00 மணியளவில் காவல் நிலையத்தில் பாதுகாப்பிற்கு வைத்ததாக அ.சா.1 குறிப்பிட்டிருந்தார் என்று சொன்னால் அவர் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளார். முதல் விசாரணையில் அ.சா.1, சம்பவம் இரவு 09.00 மணிக்கு நடந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். அ.சா.1 கொடுத்த பொய்யான

புகாரின் அடிப்படையில் சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் தொடர்பில்லை என்று சொன்னால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.07.30 17:02:48 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.